239

போதனை விஷய பூங்கொத்து

மாதமொருமுறை மலரும்

1 MAY 194

C. Venkatachalam S. 1941-43.

Editor & Publish... A. Lourduswami, B.A., L.T.
R... ...aining School, Trichinopoly.

3L
NHPP
N44·34;10,11
189992

...பிரல்-மே 1944 மலர் 10, 11

...றை பாட்சாலே, திருச்சினுப்பள்ளி.

வருஷ சந்தா ரூபாய் 1. தனிப்பிரதி அணு 2.

போதனு விஷய பூங்கொத்து

பொருளடக்கம்

பக்கம்

1. பத்திராதிபர் குறிப்புகள் 161
2. தமிழ் உச்சரிப்பு 163
3. பாடக்குறிப்பு 165
4. இருசொல் அலங்காரம் 166
5. சிறு கதை 167
6. தின்பண்டங்களின் திருவிளையாடல்கள் 169
7. ஹர்ஷ விஜயம் 171
8. யோசனைக்கணக்கு விடை 175
9. பெற்ரேர் சங்கங்கள் 176
10. பழைய மாணவர் சங்கம் 177

Rates of Advertisement

Period		Half Page			Full Page		
		Rs.	As.	Ps.	Rs.	As.	Ps.
1 Month	... ...	4	0	0	7	8	0
3 Months	... ...	11	0	0	20	0	0
6 Months	... ...	20	0	0	35	0	0
1 Year (11 Issues)	...	30	0	0	55	0	0

போதனை விஷயப் பூங்கொத்து

கொத்து 34]   15 ஏப்ரல்-மே 1944   [மலர் 10, 11

பத்திராதிபர் குறிப்புகள்

நம் பழைய மாணவர்கட்த வாழ்த்து. நம் பாடசாலைப் "பழைய மாணவர் சங்க" ஆண்டு நிறைவிழா சென்ற மாதம் கொண்டாடப்பட்டது. விவரம் மற்றோரிடத்திற் காணவும். ஷ விழாவன்று நம் பழைய மாணவர் பலர் குழுமி, விழாவில் கலந்து கொண்டமையை நாம் பெரிதும் போற்றுகின்றோம். மேலும் தாய்ப் பாடசாலையின்மட்டில் தங்களுக்குள்ள அன்பைக் காட்டும்பொருட்டுப் பலர் பற்பல பரிசுகள் அளிப்பதாக வாக்குறுதி தந்துள்ளனர். முந்திய வருடங்களைவிட அதிகமான பரிசுகள் (வெள்ளிப் பதக்கங்கள்) வழங்க ஏதுவாகப் பல மாணவர்கள் இவ்வாறு முன்வந்திருப்பது மிகவும் மகிழ்ச்சிக்குரியது; மெச்சத்தக்கது. அன்னவரனைவர்க்கும் எமது மனமார்ந்த நன்றி உரிமையாகும். அவரவர்கள் தத்தம் வாக்குறுதிகளை நிறைவேற்றுவார்களாக.

New Admission.—அடுத்த ஜூலை மாதம் நம் போதனை முறைப் பாடசாலையில் போதனை முறைப் பயிற்சிக்காக, ஸெக்கண்டரி கிரேடு, எலிமெண்டரி கிரேடுகளில் புது மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். சேர விரும்புகிறவர்கள் இதனடியில் வரும் விதிகளை நன்கு கவனிக்கக் கடவர் :—

1. இப்பாடசாலையில் அச்சிட்டுள்ள அப்ளிகேஷன் பாரத்தை (Application Form) வாங்கி, அதைப் பூர்த்திசெய்து அதை அடுத்த மே-மீ 31-ம் தேதிக்குள் இப்பாடசாலைத் தலைமை ஆசிரி

189992

யருக்கு அனுப்பவேண்டும். பாரம் வரவழைத்துக்கொள்ள விரும்புகிறவர்கள் பாரம் ஒன்றுக்கு 2 அணு வீதம் தபால் ஸ்டாம்பு அனுப்பி தேவையான பாரங்களைப் பெற்றுக்கொள்ளத்தகும்.

2. ஸெக்கண்டரி கிரேடில் 40 மாணவர்களையும், எலிமெண்டரி கிரேடில் 80 மாணவர்களையும் சேர்த்துக்கொள்ள இங்கு வசதியுண்டு.

3. ஷை விஷயமாய் அடுத்த ஜூன்-மீ 30-ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு அபேக்ஷகர்கள் இப்பாடசாலைத் தலைமை ஆசிரியரின் முன் ஆஜராகவேண்டும். ஆஜரானவர்கள் ப்ரவேச பரீட்சை எழுத ரூ. 2-0-0 ப்ரவேசக் கட்டணம் செலுத்திப் பரீட்சை எழுதவேண்டும். அப்பரீட்சையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்தான் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

குறிப்பு :—ஷை பரீட்சை கட்டணம் ரூ. 2-ல், பரீட்சை நாளன்று சாப்பாடு, இடவசதி, வினு விடைப் பத்திரங்கள் முதலியவற்றிற்கேற்படும் செலவுகள் அடங்கும்.

4. தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஒவ்வொருவரும் சேர்க்கை தினத்தன்று ரூ. 10 டிபாசிட் (Deposit) கட்டவேண்டும்.

5. ஷை டிபாசிட் கட்டுவதோடு இப்பாடசாலை போர்டிங்கில் (Boarding) சேர்ந்து படிக்க போர்டிங் அட்வான்ஸ் (advance) ரூ. 15-0-0 கட்டிச் சேரவேண்டியது அவசியமாகும்.

குறிப்பு :—எலிமெண்டரி கிரேடுக்கு வழக்கம்போல் ஸர்க்கார் ஸ்டைபெண்டு (Stipends) அளிக்கப்படும்.

விசேஷ குறிப்பு :—செக்கண்டரி கிரேடு பயிலும் மாணவர்களுக்குப் பிறப்பித்துள்ள புது உத்திரவுகளை, இப்புஸ்தகம் அட்டைப்பக்கம் பார்க்கவும்.

நமது பத்திரிகையைப்பற்றி சுற்றறிக்கை

சமீபத்தில், ஸ்ரீவில்லிப்புத்தூர் டிப்டி இன்ஸ்பெக்டர் அவர்கள், நமது "போதனு விஷயப் பூங்கொத்து" ஆசிரியர்களுக்கு மிகவும் உதவக்கூடியதென்றும், அதைத் தருவிப்பதற்கு ஏற்பட்ட சந்தாத் தொகையை ஆசிரியர் சங்க நிதியினின்று செலவழிக்கலாம் என்றும் தமது பார்வைக்குக்கீழ் இருக்கும் ஆசிரிய சங்கங்களுக்கு ஒரு சுற்றறிக்கை விடுத்துள்ளார். நாம் எதிர்பாராமல் இவ்விதம் சுற்றறிக்கை விடுத்துள்ள டிப்டி இன்ஸ்பெக்டர் அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

1 MAY 1944
MADRAS

தமிழ் உச்சரிப்பு

(J. S. Xavier Fernandez)

(கொத்து 34, மலர் 9, பக்கம் 145-ன் தொடர்ச்சி)

முதலில் மெய் எழுத்துக்களின் மேல் ஊர்ந்துவரும் உயிர் எழுத்துக்கள் முயற்சி வகையால் எவ்விதம் பிறக்கின்றதென்று பார்ப்போம்.

1. உயிர் பன்னிரண்டில் அ, ஆ வாய் திறக்கும்போது உண்டாகிறது. இதனுல்தான் கன்றுக்குட்டி அம் ஆ என்று இலகுவில் கதறுகிறது.

2. இ ஈ, எ ஏ, ஐ, வாய் திறப்பதோடுகூட மேல் வாயின் பல்லை, அடி நாக்கின் ஓரம் மேலே சென்று பொருந்தப் பிறக்கின்றன.

3. உ, ஊ, ஒ ஓ, ஔ, என்பன உதடுகளைக்குவித்தலால் பிறக்கிறது. உ, ஊ என்பவற்றை உச்சரிக்கும்போது, இதழ்களின் ஓரம் வட்டமாகக் குவிகிறது. ஒ ஓ என்பவற்றை உச்சரிக்கும்போது, மேல்கீழ் அகன்ற முட்டை வடிவமாக வாயின் உதடு அமைகிறது. 'ஔ' உச்சரிக்கும்போது, வீணுவாக இதழ்களைச் சுருக்கி உச்சரிக்கிருேம்.

வல்லினம் மெல்லினம் 6 வகை

1. க, ங முதல் நா (அடி நா) மேல் வாயின் அடியையும்,

2. ச, ஞ இடைநா (நடுநா) மேல் வாயின் நடுவையும்.

3. ட, ண நுனி நா (கடை நா) மேல் வாயின் கடைசிப் பாகத்தையும் போய்ப் பொருந்துவதால் பிறக்கிறது. (palatal sounds).

4. த, ந மேல்வாய்ப் பல்லின் அடியை நாக்கின் நுனி பொருந்தும்போது பிறக்கிறது. (Dental sounds).

5. ப, ம மேல் உதடும் கீழ் உதடும் பொருந்தப் பிறக்கும் (Bilabial sounds).

6. ற, ன நுனிநா மேல்வாய்ப் பல்லின் ஈற்றை (ஈறு) நன்கு அழுந்திப் பொருந்தும்போது பிறக்கும் (not dental sounds).

குறிப்பு :—ந என்ற சிறப்பெழுத்தே பல்லைப் பொருந்திப் பிறக்குமேயன்றி 'ன' என்ற எழுத்து பல்லின் ஈறினைத்தான் பொருந்தும் என்பது நன்கு தெரியவேண்டும்.

இடையினம் 5 வகை

இடையினமாகிய ய ர ல, வ ழ ள பிறக்குமிடம் கழுத்து.

1. ய அடி நா மேல் வாயின் அடிப் பாகத்தைப் பொருந்தப் பிறக்கும்.

2. ர, ழ நுனி நா மேல் வாயைத் தடவப் பிறக்கும்.

3. ல, நாவின் ஓரம் தடித்து மேல் வாய்ப் பல்லைப் பொருந்தப் பிறக்கும்.

4. ள, நாவின் ஓரம் தடித்து மேல் வாயை மாத்திரம் தடவுதலால் பிறக்கும். ளகரத்துக்கும் ழகரத்துக்குமுள்ள வித்யாசம்:— ழகரம் உச்சரிக்கும்போது நாக்கின் நுனி மேல் வாயைத் தடவுகிறது. ளகரம் உச்சரிக்கும்போது நாக்கின் ஓரம் தடித்து தடவுகிறது. ஆனால் லகரம் உச்சரிக்கும்போது நாவின் ஓரம் (விளிம்பு) தடித்து பல்லை மாத்திரம் தடவும் என்பதை உச்சரித்துத் தெளிக.

5. வ மேல்வாய் பல்லை கீழுதடு பொருந்தப் பிறக்கிறது.

ஆய்தம்

ஆய்த எழுத்து பிறக்குமிடம் கபாலம். முயற்சி வாய் திறத்தலே ஆகும். இனி சார்பு எழுத்து அதாவது உயிரும் மெய்யும் கூடிப்பிறக்கும் எழுத்து எவ்விதம் பிறக்குமெனில் இட, முயற்சி வகைகளால் தத்தம் முதலெழுத்தை ஒத்து இயங்கும். (உ-ம்.) "வு" என்று உச்சரிக்கவேண்டில் பிறக்குமிடம் கழுத்து; வகரம் பிறத்தற்கு என்ன விதியோ அதுபோல் கீழ் உதடு மேல் பல்லுடன் பொருந்தி, (வ் + உ = வு) பின் உகரம் உச்சரிக்கவேண்டிய முறையில் இதழ்களைக்குவித்தும் உச்சரிக்கவேண்டும்.

புறனடை

பல எழுத்துக்கு விதிகள் கூறினேமாயினும், வழக்கில் எழுத்துக்களுக்கு ஒலி முயற்சி வகையினுல் ஒன்றுக்கொன்று பல வித்யாசங்களும் உள. அவ்வித்யாசம் வார்த்தைகளை உயர்த்தி உச்சரிக்கும்போதும், தாழ்த்தி உச்சரிக்கும்போதும், நடுத்தரமாய்ப் பேசும்போதும், உண்டாகும்.

இன்னும் ஒரே எழுத்து வெவ்வேறு வகையாய் ஒலிக்கும். இவ்வேறுபாடு ஓர் பதத்தில் ஓர் எழுத்து தொடர்ந்து வரும்போதும் (உதாரணமாக காகம்). வல்லெழுத்துக்கள் மெல்லொற்றைச் சார்ந்து வரும்போதும் தோன்றும். உதாரணமாக 'தந்தது'.

'எடுத்தல் படுத்தல், நலிதல் உழப்பின
திரிபுந் தத்தமில் சிறிது உளவாகும்—

என்றார் நன்னூல் வகுத்த பவணந்தி முனிவர்.

பாடக்குறிப்பு

தமிழ் வாசகம் (பாடப்புத்தகப் பகுதியில்) **IV வகுப்பு**

நோக்கம்: சொற்ளுெகுதி வளர்த்தல்; மொழித்தேர்ச்சி பெறப் பழக்குதல். (புத்திமான் பலவான்–எனும் பாடத்தில் முதல் இரண்டு பாராக்களைப் படித்தறிதல்.)

பீடிகை: பின்வருவனபோன்ற சில கேள்விகளைக் கேட்டு பாட விஷயத்தைச் சூசிப்பித்தல் :—மிருகங்களில் எல்லாம் பெரியது எது? ஒரு தந்திரமுள்ள பிராணி யாது? சாதுவான மிருகம் என்று எதைச் சொல்வது? மிருகங்களுக்கு அரசன் என்று எதனைச் சொல்வதுண்டு? இந்த மிருகங்களைப்பற்றிய ஒரு சிறு கதையை இப்பாடத்தில் படிப்போம். ஒரு ஆட்டின் புத்திசாதுரியத்தால் மிருகங்கள் ஒரு சிங்கத்தினிடமிருந்து உயிர் தப்பின வரலாறு.

விஷயம்: (முதல் பாரா) ஒருநாள் ஒரு சிங்கம் காட்டில் இரை தேடி அங்குமிங்கும் அலைந்தது. அடவியிலுள்ள மிருகங்களை வெருட்டித் துரத்தும்பொருட்டு அது தன் வாயைத் தரையில் வைத்துக் கர்ஜித்தது. அதன் கர்ஜனையைக் கேட்ட மிருகங்கள், சிங்கம் தங்கள் பக்கத்தில் நிற்பதாகவே எண்ணி, நடுநடுங்கி ஓட ஆரம்பித்தன.

முறை: மௌன வாசிப்பு. பிள்ளைகள் ஷ பாராவை மனத்துள் படிக்கவேண்டும். ஆசிரியர் கேள்விகள் கேட்டோ, சுருக்கம் கூறச்செய்தோ, சோதிக்கலாம். மௌன வாசிப்பில் அவர்களைப் பழக்குவதே கருத்தாம்.

புது (அல்லது) கடினபத விளக்கம்: (உ-ம்.) அடவி; வெருட்டி; கர்ஜனை; நடுநடுங்கி. அடவி=காடு (கூறுதல்): மற்ற பதங்களை உதாரண வாக்கியத்தில் அமைத்துக்காட்டல்.

மாதிரி வாசிப்பு: (உச்சரிப்பு, இயற்கைதொனி, பொருள் இவை விளங்க ஆசிரியர் வாசித்துக்காட்டல்.)

பிள்ளைகளின் வாசிப்பு: ஒரு சில பிள்ளைகளை ஷ பாராவைத் திருத்தமாக வாசிக்கச் செய்தல் நலம்.

மொழித்தேர்ச்சிக்கான சில பயிற்சிகள்

உதாரணம் I. சிங்கம் ஏன் கர்ஜித்தது? சிங்கம் மற்ற மிருகங்களைப் பிடிக்க என்ன செய்தது? மிருகங்கள் ஏன் ஓட ஆரம்பித்தன?

உதாரணம் II. இரைதேடி; நடுநடுங்கி; அங்குமிங்கும்—ஒவ்வொன்றையும் ஓர் சொந்த வாக்கியத்தில் வைத்துக்கூறச் செய்க.

உதாரணம் III. வாக்கியத்தைப் பூர்த்தி செய்க:—நான் வேஷ்டிகள் வாங்கும்பொருட்டு ——

நீ உன் வீட்டில் இல்லை என்று எண்ணி ——

உதாரணம் IV. இரை; இறை; (விளக்குக); நில்—நிற்பது; கல்—கற்பது. (பகுதி—விகுதி விளக்கம்)

எண் இதற்கு இரண்டு அர்த்தங்கள் கூறுக.

உதாரணம் V. முதல் பாராவிலுள்ள வாக்கியங்கள் எத்தனை? ஏதாவது ஒரு வாக்கியத்தைக் கூறுக? அதிலுள்ள சொற்களை எண்ணிச் சொல்.

ஒருநாள் ஒரு சிங்கம் காட்டில் இரை தேடி. ஒருநாள் ஒரு சிங்கம் காட்டில் இரை தேடி அலைந்தது. இந்த இரண்டு வாக்கியங்களில் எதில் கருத்து விளங்குகிறது? எனவே, வாக்கியம் என்றால் என்ன?

உதாரணம்: VI. அதன் கர்ஜனையைக்கேட்ட மிருகங்கள், சிங்கம் தங்கள் பக்கத்தில் நிற்பதாகவே எண்ணி, நடுநடுங்கி ஓட ஆரம்பித்தன.

இந்த வாக்கியத்தைப் பின்வருமாறு சிறு வாக்கியங்களாகப் (பொருள் கெடாமல்) பிரிக்கலாம்.

அதன் கர்ஜனையை மிருகங்கள் கேட்டன. சிங்கம் தஙகள் பக்கத்தில் நிற்பதாகவே எண்ணின. ஆகவே நடுநடுங்கி ஓட ஆரம்பித்தன.

குறிப்பு:—மேலே காட்டிய மாதிரியைப்போல் நடத்தவேண்டிய பகுதியைப் போதித்து முடிக்கவும். க. ப.-வில் புதுப்பதங்களும், ஏனைய குறிப்புகளும் இருத்தல்வேண்டும். மொழித்தேர்ச்சிக்கான பயிற்சிகளை அளிப்பதில் விசேஷ கவனம் செலுத்தத்தகும்.

இருசொல் அலங்காரம்

"பூங்கோத்து படியும்"

1. சரஸ்வதி வாழ்வதெங்கு?
   சண்டைகள் நிகழ்வதெங்கு?—பூ
2. மலர்களைக் கட்டில் என்னும்?
   மரங்களை வெட்டில் என்னும்?—கொத்து
3. முகத்தில் தூசி என் செயும்?
   அகத்தில் அமர்ந்து பூங்கொத்தை—படியும்.

J. S. Xavier Fernandez.

சிறு கதை

(M. Henry Samuel, R. S. A. S.)

மிருகங்கள் பெற்ற வரம்

முன்னொருகாலத்தில் காட்டிலுள்ள மிருகங்களெல்லாம் ஒன்று கூடி ஒரு மகாநாடு நடத்தினவாம். சிங்கம் மகாநாட்டின் தலைவராக அமர்ந்தது. கடவுள் வாழ்த்துடன் மகாநாடு தொடங்கியது. மிருகங்களெல்லாம் வெகு பக்தியுடன் கடவுள் வாழ்த்து பாடின. இவைகளின் பக்தியில் ஈடுபட்டு கடவுளும் பிரஸன்னமாகிவிட்டனர். சிங்கம் உடனே தன் தலைமை ஸ்தானத்தைக் கடவுளுக்குக் கொடுத்து விட்டு சபையில்போய் உட்கார்ந்துவிட்டது.

கடவுள் எழுந்து, "அன்புள்ள மக்களே! உங்கள் கூட்டத்துக்கு நான் ஏன் வந்தேன் தெரியுமா? உங்கள் பக்தி என் மனதை இளகச் செய்துவிட்டது! ஆகவே உங்களுக்கு வேண்டிய வரங்களைக் கேளுங் கள்." என மொழிந்தருளினர்.

அக்காலத்தில் மிருகங்களின் அங்க அமைப்புகளும், குண பாவனை களும் வேறுவிதமாய் இருந்தன. குதிரைக்குக் கொம்பு இருந்தது, மாட்டிற்கு கொம்பு இல்லை. கழுதை வெகு அழகாய்ப் பாடக்கூடிய குரல் பெற்றிருந்தது. யானைக்குத் துதிக்கை இல்லை. இதுபோன்ற பற்பல வேற்றுமைகளை அம் மிருகங்கள் பெற்று விளங்கின.

வரப்பிரசாதம்பெற ஒவ்வொரு மிருகமாய் முன்வரும்போது, குதிரை எழுந்து கடவுளை வணங்கி நின்று, "ஸ்வாமி! எனக்குக் கொம்புகள் இருப்பதால் ஜனங்கள் அதைச் சீவிச்சீவி என்னைத் துன்புறுத்துகின்றனர். மேலும் காலுக்கும் கொம்புக்கும் வித்தியாச மில்லாமலிருக்கிறது. ஆகவே, தேவரீர்! கிருபைகூர்ந்து என் வம்சத் திற்குக் கொம்பு இல்லாத வரம் தந்தருளும்" எனப் பிரார்த்திக்க, கடவுளும் "இனி உங்களுக்குக் கொம்பில்லாதிருக்கக்கடவது" என்ற னர். அதுமுதல் குதிரைக்குக் கொம்புகள் முளையாமல் மறைந்தன.

பிறகு மாடு எழுந்து, "தேவரீர், எனக்குக் கொம்புகள் கொடுத் தருளவில்லை. கொம்புகள் இருந்தால் எங்களினத்தார்க்கு மிகவும் சௌகரியமாய் இருக்கும். விரோதிகளை முட்டித்தள்ளித் தற்காத்துக் கொள்வோம்" எனக் கேட்க "அவ்வாறு ஆகுக" எனக் கடவுள் கூறினவுடன் மாடுகளுக்குக் கொம்புகள் வளர்ந்துவிட்டன.

இச்சந்தர்ப்பத்தில் கழுதை, பக்கத்திலிருந்த பூனையைப் பார்த்து ஊர், ஊர் என்று சப்தித்துக்கேலிசெய்துகொண்டே தன் இனிய குரலைப் பற்றி கர்வம்கொண்டு கூட்டத்தின் அமைதியைக் கெடுக்கப்பார்த்தது. இதனைக் கவனித்துக்கொண்டிருந்த கடவுள் உடனே கோபங்கொண்டு, "தற்பெருமைகொண்ட கழுதையே! இனிமேல் உங்கள் குரல்

அவலக்ஷணமாகக்கடவது'' எனச் சபித்தனர். பூனையைப்பார்த்து, “கழுதை உன்னைக் கேலிசெய்தபோது நீ பொறுமையாய் இருந்தமையால், இனி நீ, மியாங், மியாங் என்று இனிமையாய்க் கத்துவாய் என்று வரமளித்தார்.

அவ்வமயம் ஆடு “சபையோர்களே! நமது அயர்வைத்தீர்க்க ஸ்ரீமான் நெடுஞ்செவியர் (கழுதை) ஒருபாடல் பாடுவர் எனக்கூறிற்று. (கடவுள் கழுதைக்குக்கொடுத்தாரே சாபம்! அது பலித்ததா என்று பார்க்கலாமே, என்பது ஆட்டின் எண்ணம்) இந்தச் சூழ்ச்சியைத் தெரிந்துகொண்ட கடவுள் ஆட்டை நோக்கி, “ஏ! அஜமே! உன்னை இனிமேலாக மனிதர் அறுத்துப்புசிப்பர் எனச் சபித்தனர். தன் குற்றத்துக்காக மனஸ்தாபப்பட்ட ஆடு, ஸ்வாமி! விமோசனம் இல்லையா? எனக்கெஞ்ச, சரி, சிலர் உன்னை புசிக்கமாட்டார்கள்; போ உன் சந்ததி இருக்கும் என்று கூறினர்.

அடுத்தபடியாக ஸ்ரீ யானையார் முன்வந்து வணங்கி நின்று, “கடவுளே என் வாய் அவலக்ஷணமாய் இருக்கிறது; என் கால்கள் பருமனாய் இருக்கின்றன; தங்களைத் துதிக்கக் கை வேண்டும் என்று பிரார்த்திக்க, கடவுள் அப்படியே ஆகட்டும் என்றருளினர். அதன் பிறகு யானைக்குக் கடவுளைத் துதிக்கக் கையொன்று வாயிலிருந்து தோன்றி வளர்ந்துவிட்டது. அதற்குத்தான் துதிக்கை என்று பெயர் கடவுளால் அருளப்பட்டது. கூட்டம் முடிவெய்தும்போது குரங்கு, கடவுளுக்குப் பின்னால் போய், “எனக்கு ஒரு வரம் வேண்டும்; மனிதனுக்கும் எனக்கும் ஒரு சம்பந்தம் வேண்டும்'' எனக் குறும்பாய் கேட்டது.'' சரி, நீ துஷ்டத்தனமாய்க் கேட்டதால், உனக்கு சேஷ்டை அதிகரிக்கக்கடவது. துஷ்டத்தனம் செய்யும் மனிதர்களைக் கண்டால், என்னடா குரங்கு சேஷ்டை செய்கிறாய்? என மக்கள் கூறுவர். இதுவே நீ கேட்டுக்கொண்ட சம்பந்தத்துக்குப் போதுமல்லவா? எனக் கண்டித்தார். மகாநாடு முடிவு எய்துகையில் தலைவர்க்கு வந்தன வழிபாடுகள் கூறப்பட்டன.

நன்மரண அறிக்கை

நமது பாடசாலையில் 1940—42-ல் எலிமெண்டரி ஹையர்கிரேடு பயின்ற, மாரம்பாடி பூத்தாம்பட்டியைச்சேர்ந்த, **A. சின்னப்பன்** உபாத்தியாயர், இருதய வியாதியால் பீடிக்கப்பட்டு, 27-2-1944-ல் பரலோக ப்ராப்தி அடைந்தார். அவருடைய ஆத்துமம் நித்திய சமாதானத்தில் இளைப்பாரக்கடவது. இதைக் கண்ணுறும் பழைய மாணவர்கள் இவ்வாத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளவும்.

பத்திராதிபர்.

திண்பண்டங்களின் திருவிளையாடல்கள்

(M. Sandanam, Teacher.)

(கொத்து 34, மலர் 9, பக்கம் 158-ன் தொடர்ச்சி.)

தாய் தன் மகனை "பாடசாலைக்குப் போப்பா நேரமாயிற்றென்றால்" மகன் "போங்க போகமாட்டேன், நேற்று முத்தன் அதிரிசம் கொண்டுவந்து தின்றான், நான் ஏமாந்துகொண்டிருந்தேன்; இன்றைக்கு எனக்கு அதிரிசம் கொடுத்தால்தான் போவேன்" என்று இல்லாததைக் கேட்டு, தரையில் வீழ்ந்தழுவான். தாய் சகிக்கமுடியாதவளாகி அகப்பைக்குச்சியால் நையப் புடைத்து பாடசாலைக்கு இழுத்து வருவாள்.

சில மாணவர்கள் "ஒன்றுக்குப் போய்வருகிறேன் ஐயா" என்று கேட்டுக்கொண்டு தங்கள் வீட்டுக்குப்போய் தாய் தந்தையர் வேலைக்குப் போயிருக்குந் தருணத்தில் அடுக்குப் பானைகளிலுள்ள புழுங்கரிசியை அள்ளுவதற்காக, குறவன் கூடையைக் குப்புறக் கவிழ்த்து, அதன்மேல் ஏறி அடுக்கைத் திறக்க முயற்சிப்பர். அடுக்குப் பானைகள் அடியோடு விழுந்து உடைந்து நாசமுறும். சிறுவர் அரிசியை அள்ளிக்கொண்டு ஒருவருக்குந் தெரியாமல் பாடசாலைக்கு வந்துவிடுவர். இவர்களுடைய முகத்தில், திருட்டுப் பூனைகளின் முகத்தில் காணப்படுவதைப்போல், பானைக்கரி காணப்படும். மற்ற மாணவர்கள் விகடமாடி நகைப்பர். இத்துடன் தாய்மார்கள் வேலை ஸ்தலத்திலிருந்துவந்து, சிறுவர்களின் செய்கையைப் பார்த்து வயிற்றிலும், வாயிலும் அடித்துக்கொண்டு "இதுதானா இந்த வாத்தியார் படித்துக்கொடுத்தது" என்று துயருறுவர்.

நாளடைவில் மாணவர்கள் பாடசாலை நேரத்திற்கு வராமல், கடலைக்கொல்லை, கம்மங்கொல்லை இவைகளுக்கு வரண்டித் தின்னப் போய்விடுவர். ஆசிரியர் தெருவைச் சுற்றிச்சுற்றி அலைந்து களைத்து வருந்திய முகத்துடன் பாடசாலைக்கு வருவர். இது இப்படியிருக்க மாணவர்களைக் கொல்லைக்காரர்கள் கண்டுகொண்டு தண்டித்தால், "இல்லங்க வாத்தியார்தாங்க பிடுங்கிவரச் சொன்னார்" என்பர். இதைக் கேட்டவுடன் "ஏது இந்த வாத்தி போக்கினங்கெட்டவனாயிருப்பான்போலிருக்கே" என்று கொல்லைக்காரர் பூசல்மொழிகளாடுவார். மாணவர்களும் இவரால் துரத்தப்பட்டு பாடசாலைக்கு ஓடிவருவர்.

ஆசிரியருக்கு மாணவர்கள் பாடசாலைக்குத் தீனிகளைக் கொண்டு வருவதால் ஏற்படும் கஷ்டங்கள் கணக்கற்றவையென்று தோன்றிற்று. அவர் இப்பழக்கத்தை நிறுத்தப் பலவாறு யோசித்தார். ஒரு நாள், மாணவர் சங்கத்தில், பாடசாலைக்குத் தீனிகளைக் கொண்டு வருவதால் ஏற்படும், தீமைகளை எடுத்துக்கூறி "இனிமேல் ஒரு மாணவனும் பாடசாலைக்குத் தீனியைக் கொண்டுவரக்கூடாது" என்றும் "ரகசியமாகக் கொண்டுவருபவனைக் கண்டுபிடித்து, அவனிடம் உள்ள தீனியை எல்லாருக்கும் பங்கிடப்படும்" என்றும் வற்புறுத்திக் கூறி, இரகசியமாகக் கொண்டுவரும் மாணவர்களைக் கண்டுபிடிப்பதற்கென்று ஒவ்வொரு வகுப்பிற்கு இரண்டு மாணவர்களை இரகசிய போலீஸ்காரர்களாக நியமித்தார். இதன்படி இரண்டொருவரையும் கண்டுபிடித்து அவர்களிடமுள்ள தீனிகளை எல்லோருக்கும் பங்கிடப்பட்டது. இத்துடன் ஆசிரியர், பெற்றோர்களுக்கும், மாணவர்களிடம் பாடசாலைக்குத் திண்பண்டங்களைக் கொடுத்தனுப்புவதால் ஏற்படும் கெடுதல்களை எடுத்துக் கூறினார். அவர்களும் தம் மக்களுக்குத் தங்களால் சேகரிக்கமுடிந்த தின்பண்டங்களைச் சேகரித்து வைத்துக்கொண்டு பாடசாலையில்லாத நேரத்தில் கொடுத்தும், பாடசாலைக்குத் தீனிகளைக் கொண்டுபோகாமலுங் கவனித்தனர். நாளடைவில் இப்பழக்கம் அறவேயொழிந்தது. மாணவர்களின் கல்விப் பயிரும் கவலையற்று வளர்ந்தது.

ஹர்ஷ விஜயம்

(By S. Gopalakrishnan, Jayankondam.)

189992

இடம் :—கொலுமண்டபம். மந்திரிகள், கவிகள் வீற்றிருத்தல். தங்கை ராஜ்யஸ்ரீயுடனும் விதூஷகனுடனும் ஹர்ஷர் பிரவேசித்தல்.

யாவரும் வாழ்த்து கூறல் :—

ஜே ஜே ராஜா ஹர்ஷவர்த்தனா !
ஜே ஜே நரேந்திர தர்மவர்த்தனா !
ஜே ஜே வீர பிரேம வர்த்தனா !
ஜே ஜே புத்தமத பிரகாச வர்த்தனா ! —ஜே ! ஜே !

ஹர்ஷர் :—சான்றோர்களே ! மஹா மோக்ஷ விழாவுக்குத் தயாரிப்புகள் முடிந்துவிட்டதா ?

மந்திரி :—மாடமாளிகையும் மடைப்பள்ளியும் கூடகோபுரமும் பெரும் சங்காராமங்களும் ஆடரங்கு அணியறச்சாலையும் கட்டி முடிந்துவிட்டது. அரசர்க்கும், சான்றோர்க்கும், நகர மாந்தர்க்கும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஹர்ஷர் :—நூல்கள் யாதேனும் நம் பண்டிதமணிகளால் இயற்றப்பட்டுள்ளதோ ?

பாணர் :—தேவரீருடைய திவ்ய சரிதத்தை அடியேன் வரைந்துள்ளேன்.

பாஸர் :—"யாக கண்டனம்" என்னும் மதபரமான கிரந்தம் யான் இயற்றியுள்ளேன்.

ஹர்ஷர் :—சந்தோஷம். மஹான் சீன குரு மிக பிரீதியடைவார். தர்க்க சபையன்று பரிசீலனைசெய்து சன்மானம் வழங்கப்படும்.

விதூஷகர் :—மஹா ராஜா ! இவ்வேழையும் இதோ ஓர் நூல் தீட்டியுள்ளேன்.

ஹர்ஷர் :—அதென்ன ?

விதூஷகர் :—"ஆனந்த சமய பிரதர்ஷிணீ" என்று பெயர்.

இராஜயஸ்ரீ :—பெயரே எவ்வளவு இனிமையாயிருக்கிறது.

ஹர்ஷர் :—விகடரே ! இந்நூலின் வரலாறு சிறிது கூறும்.

இராஜயஸ்ரீ :—புத்த பகவானின் சிஷ்ய சிரேஷ்டரான ஆனந்தரைப்பற்றியதாகவிருக்கும். அப்படித்தானே ?

விதூஷகர் :—தேவி, தங்கள் யூகம் சரியே !

ஹர்ஷர் :—ஆனந்தர் இப்பேர்ப்பட்ட நூல் எழுதியதாகக் கேள்விப்பட்டதேயில்லையே ! இருந்தாலும் நமது விதூஷகர் திடீரென கவியாக ஆனது ஆச்சரியமாயிருக்கிறது.

விதூஷகர் ;—பூவோடு சேர்ந்த நாரும் மணக்குமன்றோ ! கேளுங்கள் மஹா ராஜா. ஸ்ரீ ஆனந்தர் உலக விஷயங்களை யாவும் துறந்தார். ஆனால் கேவலம் நாக்கு என்னும் ரஸானுபாவத்தை ஒழிக்க முடியாமல்

தவிக்க பகவான் ஸ்ரீபுத்தர் அருள் நோக்குடன் "அப்பா நாக்கை துன்புறுத்தாதே! திருப்திசெய்" என கூற குரு ஆணையை சிரமீது கொண்டு அவர் நாக்கை திருப்திசெய்யும் வகையினை ஓர் பெரும் பார காவியமாக எழுதாது விடுக்க இக்குருவி தன் சிற்றறிவுக்கு எட்டியபடி ஈட்டியன்ன எழுத்தாணி முனையில் ஓலைகொண்டு தீட்டி யுள்ளேன். (யாவரும் சிரித்தல்).

இராஜயஸ்ரீ:—இந்நூல் படிப்போர், கேட்போர் பெறும் பயன் யாது?

விதூஷகர்:—தேவி, சரியான கேள்வி கேட்டீர்கள். சொல்லு கிறேன் கேளுங்கள். இந்நூலை வாசிப்போர் அறுசுவை உண்டியமர்ந்து இல்லாளுட்டும் நற்சுகம் பெறுவர்.

ஹர்ஷர்:—அந்நூலை நீர் தினமும் வாசியும். பசி பீடிக்காது. யாரது அங்கே (சேவகன் வருதல்) நீ விதூஷகர் வீடு சென்று அவர் சாப்பிட வரமாட்டார் என்று கூறிவிடு. (சேவகன் செல்லல்).

விதூஷகர்:—(சேவகனைக் கூப்பிட்டு) வீட்டில் சாப்பிட என் வரவில்லையென்று கேட்டால் நமக்கு ராஜா அரண்மனையில் விருந்து என்று மறக்காமல் கூறு. (சிரிப்பு).

தூதன் பிரவேசித்தல்

தூதன்:—ராஜாதி ராஜ! மானவகுல காலா! ஜே! நாளை சூர்யோதயத்துக்குள் சீனகுரு, அதிசிரேஷ்டர் ஹ்யூன் சியாங்குடன் குமார ராஜா தேவர் அவர்கள் கங்கை கரைவழியாக நேரே சங்கா ராமம் வந்து சேருவார். அங்கு தேவரீரைப் பரிவாரங்களுடன் காண காத்திருக்கிறாராம்.

ஹர்ஷர்:—மக்களனைவரும் மகோத்சவத்துக்கு வந்துசேர பறை யறைவியும். யாவும் சன்னத்தம்செய்க. (சபை கலைதல்.)

ஸீன் 2

பாணர் வீடு. பாஸ்கரர் என்னும் சாங்கிய மதக்கவி வருதல்.

பாணர்:—நமோ நம; நமோ நமோ; ஏது இவ்வேழையை நாடி இத்தனை தூரம்......

பாஸ்கரர்:—உபசாரமிருக்கட்டும், மழையெப்படி? அதைச் சொல்லும்.

பாணர்:—கோடையில் இப்போ ஏதையா மழை? எப்போ பெய்தது?

பாஸ்கரர்:—உம்ம காட்டில் எத்தனை மழை பெய்தது என்று கேட்கிறேன். ஹர்ஷ மழையைப்பற்றித்தான் கேட்கிறேன்.

பாணர்:—அன்பரே! கேளும். வர்ஷமழை தப்பினாலும் ஹர்ஷ மழை நமக்குத் தப்பாது. மின்னலன்ன ஒண்ணிற பூஞ்சால்வை ஜொலிக்க பொன்போன்ற தாரைகள் வீழ இடையிடையே முத்து முத்தாக வாரி குவிக்கும். போதுமா, இன்னும் சொல்லட்டுமா?

பாஸ்கரர் :—போதும், போதும் உமது வர்ணனை. நான் எழுதிய "தர்க்கதாண்டவ" நூலுக்கு ஆயிரம் வராகன் பரிசளிப்பது சரியா? நீர் சொல்லும் நியாயமாய். இராஜகவியாம் இராஜகவி. தாரதம்மியம் தெரிந்தால்தானே? இதே நூல் புத்த மதத்தினர் அல்லது ஓர் பிக்ஷு செய்திருந்தால் அடாடா பிரமாதப்படும். இருந்தாலும் ஹர்ஷருக்கு இவ்வளவு பாரபக்ஷம் கூடாது. மதவைராக்யத்தைக் கலைகளில் காட்டலாமோ? குட்டிச்சுவராகவல்லவோ போய் விடும்.

பாணர் :—ஏன் இவ்வளவு பதட்டம், உண்மையாகவே உமது கிரந்தம் " ஆரம்பத்தில் சூரத்தனமாகத்தான் இருக்கு; நதி போக்கு போல, போகப்போக விரியவில்லை. இந்த கிரந்தலக்ஷணம் இருக்கா சொல்லும்.

பாஸ்கரர் :—எல்லாந் தெரியுங்காணும், பசப்பாதேயும். மத வைராக்கியம் என்னசெய்கிறது எதிலே கொண்டுபோய் முடிகிறது என்று பார்ப்பீர். ஊரில் (காதோடு காதாய்) ஜாக்ரதை. நீர் தப்பித்துக்கொள்ள வழிதேடும். வெளியே சொன்னீரோ, தலை காலி.

(போதல்)

பாணர் :—உத்தமர்களை உலகம் அறியாது,

அசூயை என்பது ஓர் காமாலை வியாதி,
எல்லாம் மாறாக தோன்றும்,
கார்மேகம் கௌவுமோ காரிருள் மூடுமோ,
பாராளும் தண் மதியாம் பார்த்திபனை.—ஓ, ஓ பாடிக் கொண்டிருக்க சமயமில்லை. இதோ சென்று வேண்டியது செய்கிறேன்.

ஸீன் 3

இடம். சங்காராமம்.—உன்னத பளிங்கு கட்டடம். சபை.

ஹர்ஷர் :—தர்க்க வல்லவரும், கலா சமுத்திரருமான ஹ்யூன் சியாங் நம் சபையை அலங்கரித்துள்ளார். பரிசுத்தர். புத்த சரண பிரியர். அவர் ஞானமிருதத்தை உங்கட்கு வருஷிப்பாராக.

ஹ்யூன்சியாங் :—(எழுந்து துதித்தல்) புத்த சரணம் பஜாமி! (பிறகு) சிறிது நேரம் கேள்விகள் கேட்டறிந்தபின் பேச உத்தேசம். மன்னித்து சான்றோர்கள் விடையருள்க. பெரியது எது?

விதூஷகர் :—பாணர் தலைப்பாகைதான்.

பாஸர் :—புத்தரின் தியாகம் பெரியது.

ஹ்யூன் :—எல்லையற்றது எதுவோ?

விதூஷகர் :—ஸ்ரீ ஹர்ஷ தேவனின் புகழ்.

ஹர்ஷர் :—ஆசைதான், குருதேவரே!

ஹ்யூன் :—ஆச்சரியகரமானதெதுவோ?

விதூஷகர் :—என் வயிறுதான். தின்னத் தின்ன வாடும்.

ராஜ்யஸ்ரீ :—செத்த பிணத்துக்காக சாகும் பிணம் அழுது துக்கிப்பதுதான் ஆச்சரியகரமானது.

ஹ்யூன் :—ஆஹா! (இளவரசிக்கு என்ன வைராக்யம்) சிறிது பிரசங்கிப்போம் :—

புத்தமதம் தோன்றிய இந்நன்னாட்டில் யான் பேசக் கிடைத்திருக்கும் பாக்யம் என்னே! அவ்வாறு பேசுவதற்குத் துணிவது கொல்லன் தெருவில் ஊசிவிற்க முனைவதுபோன்றது. (கரகோஷம்) புத்தமதம் நான்கு சாகை அல்லது பிரிவு உடையது. துக்கம்; துக்க காரணம்; துக்க நிவாரணம்; நிவாரண மார்க்கம். இவற்றில்...... (சபையின் ஓர் புறத்தில், நெருப்பு புகை எழுதல்—ஜனங்கள் கூச்சல். "தீ—தீ" என்று பரபரப்பு).

ஹர்ஷர் :—அமைதி; அமைதி. மந்திரி! ஆவது செய்க.

(மந்திரி எழுந்து செல்லல்).

(திடீரென ஒருவன் கையில் கத்தி ஏந்தி ஹர்ஷரைத் தாக்குதல். காமரூபநாட்டு சிற்றரசர் குமார ராஜா சாமரத்தால் தாங்கி துஷ்டனை வீழ்த்தல்).

துஷ்டன் :—(பிரமித்து, ஹர்ஷர் காலைப் பிடித்துக்கொண்டு) அரசே! மன்னிக்க. துரோகிகள் அளிக்கும் பொன்னுக்கு ஆசைப்பட்டு இக்கொடுந் தொழில்புரிய மேற்கொண்டேன். ஏழையை அருள்பாலிக்க.

ஹர்ஷர் :—(சாந்தமாய்) மன்னித்தோம். யார் நம்மைக் கொல்ல தூண்டினது?

(சபையில் அறுவர் ஹர்ஷர் காலில் மரம்போல வீழ்ந்து)

சதிகார அறுவர் :—அண்ணலே! குற்றம் எங்களுடையதே. தேவரீர் தங்கள் புத்த மதத்தினருக்கு விசேஷ ஆதரவு கொடுப்பதால் மனக்கசப்புகொண்டு அறிவிழந்து வஞ்சம் செய்யத் துணிந்தோம். தேவரீர் உத்தம குணங்களை கண்ணாரக்கண்டு பிழையுணர்ந்தோம். மன்னிப்புக்கு அருகதையற்ற துரோகிகளைக் காப்பீராக (பணிதல்).

விதூஷகர் :—மஹாராஜா! இவர்களுக்கு காப்பு தேவையே!

ஹர்ஷர் :—இப்புனித நாளில் நீங்கள் மெய்யாகவே கண்ணீர் வார்த்து மனம் கசிந்துருகுவதால் மன்னித்தோம். நமக்கு மதமும் ஒன்றே மக்களும் ஒன்றே. நன்குணர்க.

ஹ்யூன் சியாங் :—மன்னரன்றோ உத்தம புத்த சீடர்.

விதூஷகர் :—ராஜா ராஜாத்தான்.

நகர மாந்தர் யாவரும் :—ஹர்ஷதேவர் வாழ்க! ஜே. சீலாதித்யா! அன்பினால் வசீகரிக்கும் "அஜாதசத்ரு" வாழ்க. ஜே! பிரீதி வர்த்தனா! ஜே! ஜே!! (திரை.)

யோசனைக்கணக்கு விடை

(கொத்து 34, மலர் 9, பக்கம் 160.)

யோசனைக் கணக்குக்கு விடை கூறுவதில் நினைத்த எண்ணைக் கூறுவது சிறிது கடினமுடையதே. அதிலும் இங்கு கொடுக்கப்பட்டுள்ள கணக்கில் எமது நோக்கம் நினைத்த எண்ணைக் கூறுமிடத்து யாம் கொடுக்கும் எண்ணையும் கூட்டிக்கொள்ளுதல்வேண்டும் என எந்த எண்ணையும் கொடுத்தல்கூடாது. மேலும் அவர் நினைத்த எண்ணைக்கொண்டே பெருக்குதல் வகுத்தல் கழித்தல் முதலியவற்றைச் செயச் செய்து பின்னர் விடை கூறுதல் வேண்டும் என்பது.

இக்கணக்கின் பொது விதி என்னவென்றால்:—யார் எந்த எண்ணைவேண்டுமானாலும், நினைத்துக்கொள்ளலாம். அவ்வெண்ணை மூன்றாற்பெருக்கி இரண்டால் வகுக்கச் செயல்வேண்டும். வகுக்கப்பட்ட எண்ணில் ($\frac{1}{2}$) அரை வந்ததா என்று கேட்டுத்தெரிந்து கொண்டு அரை வந்தால் அதைக் குறித்துவைத்துக்கொண்டு ஈவை ஒரு பாதியை மேலும் மூன்றாற்பெருக்கச்செய்து இரண்டால் வகுக்கச் செய்து அரை வந்ததா என்று கேட்டுத் தெரிந்துகொண்டு ஈவை (9) ஒன்பதால் வகுக்கச் செயல்வேண்டும். வகுத்ததற்கு வராவிடில் முதல் அரைகளைக்கொண்டு கணக்கிட்டுவிடலாம். வகுக்கவருமாயின் வகுத்த ஈவை அதாவது ஒன்பதில் ஒரு பாகத்தை மேற்கூறியபடி பெருக்கி வகுத்துக்கொண்டேபோகவேண்டும்.

விடை காணும் வழி

பெருக்கி வகுக்கப்படும்போது, இரண்டு வகுத்தலிலும் அரை வருமாயின் (1) ஒன்று என்று முன் வராது பின் வந்தால் (2) இரண்டு என்று முன் வந்து பின் வராவிடில், (3) மூன்று என்றும் வைத்துக் கொள்ளவேண்டும். எத்தனை முறை வகுக்கப்படினும் விதி ஒன்றே. பின் கடைசியாக வகுத்த எண்ணை வைத்து (4) நான்காற் பெருக்கி அடுத்த எண்ணைக்கூட்டி நான்காற் பெருக்கிக் கடைசியாய் பெருக்கி வரும் எண்ணே நினைத்த எண்ணாகும். பெருக்கி வகுக்குங்கால் இரண்டிடத்திலும் அரை வராவிடின் (0) பூஜ்யம் என்று வைத்துக்கொண்டு கணக்கிடல்வேண்டும்.

(உ-ம்.) 5 என்ற எண்ணை 3-ல் பெருக்கினால் $3 \times 5 = 15$. 2 ஆல் வகுத்தால் $\frac{15}{2} = 7\frac{1}{2}$ அரை வந்தது. அரையை நீக்கி மூன்றாலும் பெருக்கினால் $7 \times 3 = 21$. 2-ல் வகுத்தால் $2\frac{1}{2} = 10\frac{1}{2}$ அரை வந்தது. $\frac{1}{2}\ \frac{1}{2} = 1$.

11-ஐ 9-ல் வகுத்தல்வேண்டும். வகுக்குங்கால் பின்னங்களை நீக்கி விடுதல்வேண்டும். நீக்கி வகுத்துவரும். $\frac{11}{9} = 1$. ஒன்று ஒன்றை மூன்றால் பெருக்கினால் $1 \times 3 = 3$. 2-ல் வகுத்தால் $\frac{3}{1} = 1\frac{1}{2}$ அரை வந்தது. அரையை நீக்கி மூன்றால் பெருக்க. 3-ஐ 2-ஆல் வகுக்க $1\frac{1}{2}$. இரண்டிடங்களிலும் அரை வந்ததினால் 1.

இப்போது விடைகாணுதல். முதலிலும் 1. இரண்டாவதும் 1. 1–1. $1 \times 4 = 4$. நாலோடு ஒன்றைச்சேர்த்தால் 5. இதே விடை. இவ்வாறே பிறவும். (மலரன்பன்.)

பெற்ருேர் சங்கங்கள்

22-2-'44-ல், திருச்சி தாலூகா மெளகுபாறை லேபர் பாடசாலை யின் 10-வது, பெ. ச. கூட்டம் திரு. சபாபதி நாட்டாண்மையார் அவர்களது தலைமையின்கீழ் வெகு சிறப்பாய்க் கொண்டாடப்பட்டது.

G. R. Lawrence, Secretary.

23-2-'44-ல், சத்தியமங்கலம் போர்டு, ஆண், உயர்தர ஆரம்பப் பாடசாலை, பெ. சங்கம், ஸ்ரீ V. S. கிருஷ்ண செட்டியார் அவர்களது தலைமையின்கீழ் கூடிற்று. மாணவ மாணவிகளால் கும்மி, கோலாட்டம், நாட்டியம் முதலிய நிகழ்ச்சிகள் நடந்தேறின. தமிழின் சிறப்பைப்பற்றி ஆசிரியர் ஸ்ரீ சுப்பிரமணியம் இனியதோர் சொற்பொழி வாற்றினர். மாணவர்கட்கு சுகாதார வசதிகள் அளிப்பதைப்பற்றிய தீர்மானங்கள் நிறைவேறின.

R. Venkatarama Sastri, Secretary.

27-2-'44-ல், கள்ளக்குறிச்சி தாலூகா, சங்கராபுரம் போர்டு, உயர்தர ஆரம்பப் பாடசாலையின் பெற்ருேர் சங்க ஆண்டுவிழா வக்கீல் ஸ்ரீ T. A. தாத்தாச்சாரியார் அவர்களது தலைமையின்கீழ் நடைபெற லாயிற்று. ஷை ரேஞ்சு டெப். இன்ஸ். ஸ்ரீ சுந்தரேச அய்யர், B.A., L.T. அவர்கள் பெற்ருேரின் ஒத்துழைப்பு என்பதைப்பற்றியும், ஸ்ரீ லக்ஷ்மீகாந்தம் அய்யர், B.A., L.T. அவர்கள் "பெண்கல்வி" என்பதைப்பற்றியும் அரிய சொற்பொழிவுகளை விரிய நிகழ்த்தினர். தலைவருடைய முடிவுரைக்குப்பின் பாடசாலை மாணவர்கட்குப் பந்தய விளையாட்டுப் பரிசுகள் தலைவரால் வழங்கப்பட்டன. "ராஜ்யஸ்ரீ" என்ற ஓர் அழகிய நாடகம் மாணவர்களைக்கொண்டு நடித்துக் காட்டப் பட்டது. ராஜ வாழ்த்துடன் ஷை வைபவம் இனிது முடிந்தது.

S. Narayanaswamy Aiyar, Secretary.

2-3-'44-ல், சருகணி, R. C. உயர்தர ஆரம்பப் பாடசாலையில், பெற்ருேர் சங்கமும், மாணவர் கல்விக்கழக ஆண்டுவிழாவும் திருவாடனை ரேஞ்சு, டிப்டி இன்ஸ்பெக்டர், ஸ்ரீ மகம்மது ஹேபிப் B.A., L.T. அவர்கள் தலைமையின்கீழ் நடைபெற்றது. மாணவர்களால், சம்பாஷணை, கோலாட்டம், கும்மி, அபிநயப் பாட்டுக்கள் முதலியன நடத்தப்பட்டன. யுத்த சேவை என்ற விஷயமானது நாடகமாக நடிக்கப்பட்டது. இறுதியாக, இன்ஸ்பெக்டர் அவர்கள், பெற்ருேர் கடமை—யுத்தத்தில் நமது இந்திய மக்களின் ஒத்துழைப்பு என்பதைப்பற்றி ஒரு உபந்நியாசம் செய்தனர்.

S. Arulraj, Secretary.

பழைய மாணவர் சங்கம்

திருச்சி திருக்குடும்ப போதனு முறைப் பாடசாலை பழைய மாணவர் சங்க ஆண்டு விழா

மேற்படி விழா 1—3—44 புதன்கிழமை 5-30 மணிக்கு திருச்சி ஜப்பள்ளி ஜில்லா கல்வியதிகாரியவர்களின் உதவியாளர் ஸ்ரீ S. வீராசாமி பத்தர் M. A. L. T., அவர்களது தலைமையின்கீழ் எம் பாடசாலை சபா மண்டபத்தில் வெகு குதூகலத்துடன் நடைபெற்றது. அவ்வமயம் திருச்சி ஜில்லா கல்வியதிகாரியாகிய ஸ்ரீ S. முருகேச முதலியார் B. A. L. T., அவர்களும் விஜயம் செய்திருந்தனர்.

மேற்படி வைபவம் கடவுள் வணக்கத்தோடு தொடங்கிற்று எம் பாடசாலை தலைமையாசிரியரும், எம் சங்கத் தலைவருமான சங்கைக்குரிய A. லூர்துசாமி B. A. L. T., அவர்கள் அனைவருக்கும் நல்வரவு கூறினர்.

அவ்வமயம் குழுமியிருந்த சுமார் 300 பேருக்கு தேனீர் விருந்து அளிக்கப்பட்டபின் பழைய மாணவர்களும் புதிய மாணவர்களும் பிரிவுபசார சொற்பொழிவுகளை நிகழ்த்தினர். ஆசாரியர்களின் சார்பாக ஸ்ரீ கணபதி அய்யரவர்கள் பாடசாலையைவிட்டு வெளிபோகும் மாணவர்கட்கு ஆசிகூறினர். பின்னர் நம் பழைய மாணவர் சங்கத்தின் முன்னேற்றத்திற்காக வெகுவாய் உழைத்து வருபவரும் நம் சங்க பொக்கிஷதாருமாகிய திரு. Y. சூசைமாணிக்கம் அவர்கள் தாய் பாடசாலைமட்டில் பழைய மாணவர்கள் செலுத்தவேண்டிய கடமைகளைப் பற்றி அரியதோர் சொற்பொழிவாற்றினர். (விவரம் மற்றோரிடத்தில் காண்க.)

சங்கக் காரியதரிசி ஸ்ரீ R. பிச்சைப் பிள்ளை அவர்களால் வருடாந்தர ரிப்போர்ட் வாசிக்கப்பட்டது.

பின்னர் அவ்வமயம் நடைபெற்ற சங்கீதப் போட்டியில் முதன்மையாக விளங்கிய N. ஆறுமுகம் என்பவருக்கு ஒரு வெள்ளிப் பதக்கமும், இரண்டாவதாக விளங்கிய M. பிரான்ஸிஸ் என்பவருக்கு ஒரு வெள்ளிப் பதக்கமும், சாரணர்களுள் முதல்தரமான P. அந்தோனிமுத்து என்பவருக்கு ஒரு வெள்ளிப் பதக்கமும், முதலுதவியில் முதல்தரமான M. இருதயநாதன் என்பவருக்கு ஒரு வெள்ளி பதக்கமும், இரண்டாவதாக விளங்கிய L. அந்தோனிசாமி என்பவருக்கு புத்தகப் பரிசும், பாடசாலைக் கல்விக் கண்காட்சியில் சிறந்த காட்சிப் பொருள்களை உதவியவர்களுக்கும், பாடசாலையைவிட்டு வெளியேகும் சாரணர்களுக்கும் நற்சாட்சிப்பத்திரங்களும் திருச்சி ஜில்லா கல்வியதிகாரியவர்களால் வழங்கப்பட்டன.

கடைசியில் சபைத் தலைவரவர்கள் பலத்த கரகோஷத்தினிடை எழுந்து தமது சொற்பொழிவை நிகழ்த்துகையில் தம்மை இந்த விழாவில் கலந்துகொள்ளுவதற்கு அவகாசம் அளித்ததற்கு நன்றி கூறி, வெளியேறும் மாணவர்கள் தங்கள் தொழிலே ஒழுக்கங் குன்றாது நடத்தி கிராமக் கல்வியை முன்னேற்றமடைய உழைக்க வேண்டுமென புத்திமதி கூறினர்.

இறுதியாக சங்கக் காரியதரிசியவர்கள் அனைவருக்கும் வந்தனோபசாரங் கூறி, பாடசாலைக் கீதத்துடன் மேற்படி விழா இனிது முடிவெய்தியது.

பழைய மாணவர் சங்கக் காரியக் கூட்டம்

6—3—44 திங்கட்கிழமையன்று எமது பாடசாலை பழைய மாணவர் சங்கக் காரியக் கூட்டம் பாடசாலை தலைமையாசிரியரின் தலைமையின் கீழ் நடைபெற்றது. நம் பழைய மாணவர்களில் பலர் முந்திய வருஷங்களைவிட அதிகமான பல வெள்ளிப் பதக்கப் பரிசுகள் அளிப்பதாக வாக்குறுதி செய்தனர்.

இவ்வாறு பலர் வாக்குறுதியளித்ததற்காக எம் மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்... தாய்ப் பாடசாலை மட்டில் அன்னவருக்குள்ள அபிமானம் மிகவும் போற்றத்தக்கதென்பதையும் இதில் குறிப்பிடுகிறோம். சென்ற வருஷம் பரிசுகளளித்த பழைய மாணவருக்கும், இவ்வருஷம் வாக்களித்துள்ளவர்களுக்கும் எம் மனமார்ந்த நன்றியைக் கூறுதும்.

R. Pitchai,
காரியதரிசி, திருச்சி திருக்குடும்ப போதனா முறைப் பாடசாலை பழைய மாணவர் சங்கம்.

பழைய மாணவர் சங்கத்தின் ஆண்டு விழாவன்று, ஷை சங்கத்தின் பொக்கிஷதார் ஸ்ரீ Y. சூசைமாணிக்கம் அவர்கள் நிகழ்த்திய அரியதோர் சொற்பொழிவின் சாரம் பின்வருமாறு:—

சமீபத்தில் நம் பிரிட்டிஷ் ராஜ்யத்தின் பிரதம மந்திரியான சர்ச்சில் துரையவர்கள், செய்த ஒரு பிரசங்கத்தில் "மகத்தான போராட்டங்கள் இன்னும் ஏற்படவிருக்கின்றன, என்றும் அதை அனுசரித்து தேசமக்கள் மிகப் பொறுமையுடன் அவைகளைச் சகித்து, தேச நன்மையைக் கருதி அவர்களாலான தியாகங்கள் செய்ய முன்வரவேண்டுமெனக் கூறியுள்ளார்." ஆகையினால் நண்பர்களே, இப்படிப்பட்ட நெருக்கடியான நிலைமையில் ஆசிரிய மாணவர்களாகிய நீங்கள், உலக வாழ்க்கையில் ஈடுபடப்போகிறீர்கள். நீங்கள் கற்ற போதனைகளையும், சாதனைகளையும் நல்வழியில் பிரயோகித்து அதன்படி நடக்கவேண்டியதவசியமாகும்.

ஆறு, குளம், ஏரி, கடல் முதலியவைகளுக்குக் கரையுண்டு. ஆனால் கல்விக்குக் கரை கிடையாது. எக்காலமும் கல்வியை விருத்தி செய்துகொண்டு போகலாம். அதனால் படிப்பை முடித்த நீங்கள் உங்களுடைய படிப்புக்கு முடிவு ஏற்பட்டதென்று நினைக்கக்கூடாது. உங்களுடைய அறிவை நாளுக்கு நாள் பெருக்கிக்கொண்டு போகவேண்டும்.

கப்பல் சண்டைகளில் மிகவும் கீர்த்திபெற்ற நெல்சன் பிரபு, வாட்டர்லோ என்ற இடத்தில் சண்டைசெய்து ஜெயம்பெறும் தருணத்தில் ஒரு குண்டுபட்டு மரித்தார். ஆனால் அவர் மரணத்தருவாயில் சொன்ன வார்த்தைகள் "இங்கிலாந்து தேசம் ஒவ்வொரு ஆங்கிலேயரும் தன்னுடைய கடமையைச் செய்யும்படி எதிர்பார்க்கிறது" என்று சொன்னார்.

அப்புத்திமதி புதிதாக ஆசிரியர் தொழிலில் பிரவேசிக்கும் உங்களுக்கும் ஏற்றது. இந்தியா தேசமானது, ஒவ்வொரு ஆசிரியரும் தங்களுடைய கடமையைச் செய்யும்படி எதிர்பார்க்கிறது. தேச முன்னேற்றத்திற்கு உழைக்கப் போகும் பாலர்கள் உங்கள் வசம் கல்வி கற்கப் போகிறார்கள், என்பதை நன்கு உணரவேண்டும்.

கோகலே என்பவர், சிறந்த போதகாசிரியர் எனப் பெயர்பெற்று சகோதர ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் கொண்டாடப்பெற்றார். எந்தப் பாடத்தைப் போதிக்குமாறு கலாசாலை கண்காணிப்பவர் அவரை வேண்டினும், அப்பாடத்தை அவர் சிரமப்பட்டு படித்து மாணவர்கள் தெளிவாகத் தெரிந்துக்கொள்ளும்வண்ணம் புகட்டிவந்தார். அவர் பல பாடங்களையும் மாறி, மாறி மாணவர்கட்கு போதித்து வந்தமையால் சிலர் அவரை "கட்டளைப்படி மாறும் அறிஞர்" என்று கூறிப் பரிகாசம் செய்வது வழக்கம். அவர் ஆசிரியர் பதவியைவிட்டு நீங்கினதால், அவரது பிரிவுக்கு மிக்க வருந்தி பல பிரிவுபசாரப் பத்திரங்கள் வாசித்துக் கொடுத்தார்கள். சில மாணவர்கள் அவரது பிரிவிற் காற்றாது கண்ணீர் விட்டனர். கோகலே மாதிரி ஒவ்வொரு ஆசிரியரும் இருக்கவேண்டும். அவர் இருபது ஆண்டுகள் ஆசிரியர் தொழிலை மேற்கொண்டார். சிறந்த ஆசிரியராக எல்லோராலும் போற்றப்பட்டார். சகல பாடம் போதிப்பதிலும் திறமையுள்ளவராக இருந்தார். அவருடைய பாதச் சுவடுகளை ஆரம்ப ஆசிரியர்களாகிய நீங்களும் பின்பற்றி தேசத்தொண்டு புரியவேண்டும். அப்பொழுது இந்தியா தேசம் அயல் தேசங்களைப்போல கல்வி, தொழில், நாகரிகம் முதலியவற்றில் தலை தூக்கும் என்பதை ஒவ்வொரு ஆசிரியரும் பசுமரத்தில் அறைந்த ஆணியைப்போல் தங்களுடைய இருதயத்தில் பதியவைத்து இப்பாடசாலையைவிட்டு வெளியேறவேண்டும். அப்பொழுதுதான் நம் தாய்நாடு மேல்நாட்டைப்

போல் முன்னேற்றம் அடையும். நீங்களும் ஆசிரியர்களாக மானிடர் சமுகத்தில் சிறப்புற்று விளங்குவீர்கள். நீங்களும் உங்கள் தாய்நாட்டுக்குச் செய்யவேண்டிய சேவையை சிறந்த முறையில் செய்தீர்களென்னும் மனச்சாந்தி அடைவீர்கள். உலகத்தில் மிகப் பெரிய நாடுகள் மூன்று, அவை இந்தியா, சீனு, ருஷ்யா. 1918-ம் வருஷம் லெனின் அரசாங்க நிர்வாகத்தை ஏற்றுக்கொண்ட காலத்தில் ருஷ்ய மகா ஜனங்களில் 100-க்கு 73 பேர் எழுதப்படிக்கத் தெரியாதவர்களாய் இருந்தார்கள். இருபது வருஷங்களுக்குப்பிறகு இந்த நிலைமை அடியோடு மாறிவிட்டது. இங்ஙனம் பள்ளிக்கூடங்களில் சென்று படிக்கிறவர்களைத்தவிர கல்வியறிவு இல்லாமலே பல தொழில்களிலும் ஈடுபட்டிருக்கிற வயது முதிர்ந்தவர்களுக்கும் படிப்புச் சொல்லிக்கொடுக்க அரசாங்கத்தார் ஏற்பாடு செய்திருக்கிறுர்கள். இப்பொழுது சுமார் 4 கோடி பேர் இந்த மாதிரி கல்வியறிவு பெற்றிருக்கிறுர்கள். அவருடைய பிரயாசையால் ருஷ்யாவில் மொத்தம் 90 விதமான பாஷைகளில் நூல்கள் வெளியாகின்றன. 80 விதமான பாஷைகளில் பிள்ளைகளுக்குப் பாடங்கள் போதிக்கப்படுகின்றன. 1913-ம் வருஷம் தொழில் பள்ளிக்கூடங்கள் 1,12000 இருந்தன. ஆனல் 1940-ம் வருஷம் 7 லட்சம் பள்ளிக்கூடங்களாக இருக்கின்றன, இப்பொழுது சர்வகலாசாலைகள் 716 இருக்கின்றன. ஆகையால் ஆரம்ப ஆசிரியர்களாகிய நீங்களும் ஊக்கமும் உற்சாகத்தோடு வேலை செய்தால் ஏன் நம் தாய் நாட்டை ருஷ்யாவைப்போல், கல்வித்துறையில் முன்னேற்றம் அடையும்படி செய்யமுடியாது!

மேலும் மாதந்தோறும் மலர்கின்ற "போதனு விஷயப் பூங்கொத்தை" நீங்கள் எல்லோரும் அவசியம் வாங்கிப் படிக்கவேண்டும். பிணியுற்று வருந்துவோனுக்கு ஔடதம் உடல் நலத்தைக் கொடுப்பதுபோல, ஆசிரியர்களுக்கும் பூங்கொத்து போதனு சக்தியை வளர்க்கிறது, என்பதற்கு ஐயமில்லை. அதனல் உங்களுக்கும், நீங்கள் போதனு முறை பயின்ற பாடசாலையின்கண் கற்ற உபாத்தியாயர்களுக்கும், எப்பொழுதும் அன்பு உருவாகி இப்பூவுலகில் நிலைபெற்று இருக்கும். உங்களுடைய உழைப்பினுல், உயரிய கட்டுரைகளை மாதாமாதம் எழுதியனுப்பி சஞ்சிகையைச் சிறப்புச்செய்ய முன்வரவேண்டும் என்பது என் கருத்து.

Y. சூசைமாணிக்கம், பொக்கிஷதார்,
பழைய மாணவர் சங்கம்,
திருக்குடும்ப போதனுமுறை பாடசாலை,
திருச்சினுப்பள்ளி.

...ஆவணக் காப்பக...

சங்கீதம்

செவ்விந்தியர்

(S. S. Arockiaswamy, Teacher, Hanumandanpatty.)

28, மே. க. பச்சமலை பவளமலை என்ற மெட்டு ஏகதாளம்

(பூகோளப்பாட்டு)

							1
ஸாம	மமா	கமப	மகா	கமப	மகா	மாப	பதப
செவ்விந்	தியர்	வாழ்க்	கைதனை	செப்பிடு	வோம்	நாமே	. . .
				மாப	மகா	மா	பா ;
				செப்பிடு	வோம்	நா	மே .
2	2 2 2						
மாத	தநித	பதத	பமா	மாத	பமக	மாம	மதத
சீர்மை	வட	அமெரிக்	காவின்	தென்	புரம	வர்தாமே	
				பாத	பமக	மா	மா ;
				தென்	புர	மவர்	தாமே

(மற்ற அடிகளை இதேமாதிரி பாடவும்)

பாட்டு

1. செவ்விந்தியர் வாழ்க்கைதனை செப்பிடுவோம் நாமே
சீர்மை வட அமெரிக்காவின் தென்புறம் அவர்தாமே

2. கொட்டும்பனி குளிர்காடு கொண்ட கடலோரம்
கூடாரம் மர வீட்டில் குடியிருக்கிறார் பாரும். செவ்.

3. ஊசி இலை காடதிகம் ஓங்கும் பைஸன் எருமை
நாசி நீண்ட கலைமானங்கு நாட்டம் செய்தல் பெருமை. செவ்.

4. கண்டுதடிகுண்டு வெடிகொண்டு அவரோடி
காட்டுவேட்டை கடல்வேட்டை கடுமையாக ஆடி. செவ்.

5. கொண்டுவரும் விலங்கினத்தைக் கூறுவேறு செய்ய
கொம்பெலும்புக் கோடரியால் கொடுப்பார் வெட்டு நைய. செவ்.

6. பனிச்செருப்பு தோலுடைகள் பாங்காயணிந்துகொள்வார்
பனிச்சருக்குக் குதிரைவண்டி பாரமேற்றிச் செல்வார். செவ்.

7. தொட்டில் மரக்கட்டைகளில் துளைத்துக் குழந்தை சீராய்
தூங்கவிடுவார் தேவதாரு மரத்தின்மேலே பாராய். செவ்.

8. அக்கரையாய் மிஷனேரிகள் அமைத்த பள்ளிக்கூடம்
அணியணியாய் சிறுவர்கூடி அறைந்திடுவார் பாடம். செவ்.

9. சிவப்பு வர்ணம் முகத்தில் பூசி ஜீவிக்கிறார் உயிரே
உவப்புகொண்டு கொலம்பஸ் துரை உரைத்தாரிந்த பெயரே.
செவ்விந்தியர்.

189992
600 008

Reg. No. M. 1534

Proceedings of the Director of Public Instruction, Madras.

C. No. 505 E/44 dated 31-3-1944.

1944-45 வருஷத்தில் **செக்கண்டரி கிரேடு போதனு முறை** பயிலுவதற்காக மாணவர்களைச் சேர்க்கப்படும் விஷயத்தில் கீழ்க்கண்ட உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன :—

(1) மெட்ரிகுலேஷன் அல்லது S. S. L. C. பரீக்ஷையில் பாஸ் பண்ணினவர்களுக்கு விசேஷ உரிமை உண்டு.

(2) மேற்படி பரீக்ஷ பாஸ் பண்ணினவர்களைச் சேர்த்து மீதியாயுள்ள இடங்களுக்கு கல்வியிலாகா அதிகாரிகள் கீழ்க்கண்ட மார்க்குகள் வாங்கினவர்களையும் சேர்த்துக்கொள்ளலாம் :—
English, Language, Elemen. Mathematics and Optional : 30% ;
Elemen. Science and History and Geography : 25%.

(3) மேற்கண்ட மார்க்குகள்கூட வாங்காதவர்களை டைரக்டர் விசேஷ காரணங்களை முன்னிட்டு சேர்த்துக்கொள்ளும்படி உத்தரவளிக்கலாம்.

(4) ஏற்கனவே எலிமெண்டரி ஹையர் கிரேடு போதனு முறை பயின்றிருந்தவர்களைக்கூட மேற்படி (2)-வது ஷரத்தின்படி செக்கண்டரி கிரேடு பயில சேர்த்துக்கொள்ளலாம்.

மேற்கண்ட உத்தரவுகளெல்லாம் சர்க்கார் போதனுமுறை பாடசாலைகளுக்கும், aided (திரவிய சகாயம் பெறும்) போதனு முறை பாடசாலைகளுக்கும் பொருந்தும்.

குறிப்பு :—(1) S. S. L. C. பரீக்ஷையில் பாஸ்பண்ணுதவர்கள்கூட செக்கண்டரி கிரேடு பயில நமது பாடசாலைக்கு மனுப் போடலாம்.

(2) ஏற்கனவே எலிமெண்டரி ஹையர் கிரேடு பயின்ற ஆசிரியர்கள்கூட செக்கண்டரி கிரேடு பயில நமது பாடசாலைக்கு மனுப்போடலாம்.

மார்க்குகள் தெரிவதற்காக S. S. L. C. புஸ்தகங்களையும் அன்னவர்கள் அனுப்பவேண்டியது.

(3) அநேகமாய் செக்கண்டரி கிரேடு பயிலும் மாணவர்கட்கு ஸ்டைப்பெண்டு (Stipends) வழங்கப்படும்.

மனுக்கள் கூடியசீக்கிரம் கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்பவேண்டும் :—

Headmaster,
R. C. Secondary Training School,
Trichinopoly.

Printed by Rev. Fr. A. Susai Regis,
Supdt., St. Joseph's Industrial School Press, Trichinopoly.

Proceedings of the Director of Public Instruction, Madras.

C. No. 505 E/44 dated 31-3-1944.

1944-45 வருஷத்தில் **செக்கண்டரி கிரேடு போதனா முறை** பயிலுவதற்காக மாணவர்களைச் சேர்க்கப்படும் விஷயத்தில் கீழ்க்கண்ட உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன :—

(1) மெட்ரிகுலேஷன் அல்லது S. S. L. C. பரீக்ஷையில் பாஸ் பண்ணினவர்களுக்கு விசேஷ உரிமை உண்டு.

(2) மேற்படி பரீக்ஷை பாஸ் பண்ணினவர்களைச் சேர்த்து மீதியாயுள்ள இடங்களுக்கு கல்வியிலாகா அதிகாரிகள் கீழ்க்கண்ட மார்க்குகள் வாங்கினவர்களையும் சேர்த்துக்கொள்ளலாம் :—

English, Language, Elemen. Mathematics and Optional : 30% ;
Elemen. Science and History and Geography : 25%.

(3) மேற்கண்ட மார்க்குகள்கூட வாங்காதவர்களை டைரக்டர் விசேஷ காரணங்களை முன்னிட்டு சேர்த்துக்கொள்ளும்படி உத்தரவளிக்கலாம்.

(4) ஏற்கனவே எலிமெண்டரி ஹையர் கிரேடு போதனா முறை பயின்றிருந்தவர்களைக்கூட மேற்படி (2)-வது ஷரத்தின்படி செக்கண்டரி கிரேடு பயில சேர்த்துக்கொள்ளலாம்.

மேற்கண்ட உத்தரவுகளெல்லாம் சர்க்கார் போதனாமுறை பாடசாலைகளுக்கும், aided (திரவிய சகாயம் பெறும்) போதனா முறை பாடசாலைகளுக்கும் பொருந்தும்.

குறிப்பு :—(1) S. S. L. C. பரீக்ஷையில் பாஸ்பண்ணாதவர்கள்கூட செக்கண்டரி கிரேடு பயில நமது பாடசாலைக்கு மனுப் போடலாம்.

(2) ஏற்கனவே எலிமெண்டரி ஹையர் கிரேடு பயின்ற ஆசிரியர்கள்கூட செக்கண்டரி கிரேடு பயில நமது பாடசாலைக்கு மனுப்போடலாம்.

மார்க்குகள் தெரிவதற்காக S. S. L. C. புஸ்தகங்களையும் அன்னவர்கள் அனுப்பவேண்டியது.

(3) அநேகமாய் செக்கண்டரி கிரேடு பயிலும் மாணவர்கட்கு ஸ்டைப்பெண்டு (Stipends) வழங்கப்படும்.

மனுக்கள் கூடியசீக்கிரம் கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்பவேண்டும் :—

Headmaster,
R. C. Secondary Training School,
Trichinopoly.

Printed by Rev. Fr. A. Susai Regis,
Supdt., St. Joseph's Industrial School Press, Trichinopoly.